வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்
(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)
முன்னிலை – **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**
தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி)
கும்பகோணம்
2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17ஆம் தேதி புதன் கிழமை

**எம்.சி.ஓ.பி எண். 232/2023**

**CNR No.TNTJ190013532023**

ஆனந்தி .....மனுதாரர்

–எதிர்–

1. ஸ்ரீ பழனி ஆண்டவர் பஸ் சர்வீஸ், அதன் உரிமையாளர்.
2. கிளை மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், கும்பகோணம். .....எதிர்மனுதாரர்கள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.B.சங்கர் கணேஷ் M.A., B.L., திரு.G. அருண்பிரசாத் B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 1ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. ஜெயபால் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழுங்கும்.....

**உத்தரவு**

மனுதாரருக்கு 09.08.2018 ஆம் தேதி விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.30,00,000/– வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 166 –ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம்</u>:

(i) மனுதாரருக்கு விபத்தின் போது வயது 38 ஆகும். மனுதாரர் விபத்தின் போது கூலி வேலை செய்து மாதம் ரூ. 18,000/- வருமானம் ஈட்டி வந்தார். கடந்த 09.08.2018 அன்று மாலை 4.30 மணியளவில் தாராசுரத்திலிருந்து பாபநாசம் செல்வதற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 49 BH 1213 பதிவு எண் ஸ்ரீ பழனி ஆண்டவர் தனியார் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருக்கும்போது தாராசுரம் பிரதான சாலை அண்ணாசாலை ரவுண்டானா வளைவில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் அதன் ஓட்டுனர் ஓட்டியதால் முன்பக்க படிக்கட்டு வழியாக மனுதாரர் கீழே விழுந்து அவருக்கு தலையில் பின் பக்க மண்டை ஓடு உடைந்து மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டது. மேலும் கை, கால், தோள்பட்டை, நெஞ்சு, விலா, முதுகு மற்றும் உடல் முழுவதும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டது. மனுதாரர் முதலில் கும்பகோணம், அன்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின் திருச்சி, காவேரி தனியார் மருத்துவமனையில் 09.08.2018 முதல் 19.08.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையில் இருக்கும்பொழுது மூளையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மனுதாரருக்கு தலையில் ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு வெளிநோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி விடுவிப்பு செய்யப்பட்டார். மனுதாரர் தற்போது வரை தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

(ii) மேற்கண்ட கொடுங்காயங்களால் தற்போது வரை மனுதாரர் இயல்புநிலைக்கு திரும்ப முடியவில்லை மற்றும் தொடர்ந்து தலைவலி, மயக்கம், உடல்சோர்வு, கை, கால் நடுக்கம், எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனுதாரரின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு வீட்டில் படுக்கையில் இருப்பதால் மனுதாரருக்கு உதவியாளர் ஒருவர் எப்போதும்

தேவைப்படுகிறார். மனுதாரர் இந்த விபத்தினால் வேலை, வருமானம் இழந்து மிகுந்த மருத்துவ செலவுகளால் மன உளைச்சலும் பொருளாதார இழப்பும் ஏற்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் மீது கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண் 225/2018ல் பிரிவு 279, 337 இ.த.சவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களால் எதிர்கால வாழ்க்கை பாதிப்பு, வருமான இழப்பு, பொருள் சேதம் ஆகியவற்றிற்கு ரூ. 30,00,000– இழப்பீடு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் பேருந்து 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்தோ, தனித்தோ மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள்.

3) <u>2ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களை அவர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். 1ஆம் எதிர்மனுதாரரின் பேருந்து 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. மனுதாரர் விபத்து சமயத்தில் தாராசுரத்திலிருந்து பாபநாசத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் பேருந்தில் பயணம் செய்துள்ளார். விபத்து சமயத்தில் பிரதான சாலையானது மோசமான நிலையில் இருந்ததால் மனுதாரர் பேருந்திலிருந்து கீழே விழுந்து அவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் பேருந்தில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம். எனவே மனுதாரரே விபத்திற்கு காரணம். மனுதாரர் தனது கோருரிமையை நிரூபிக்கும் வண்ணம் உரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்களாகும். மனுதாரர் தனது வேலையை தொடர்ந்து செய்து வருகிறார். விபத்தினால் மனுதாரருக்கு எவ்வித வருமான

இழப்பும் இல்லை. இம்மனு நிலைக்கதக்கது அல்ல. இம்மனு தள்ளுபடி செய்யதக்கதாகும்.

**4) சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றாவணம் நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்:**

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3) | மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**6) பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு:**

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 09.08.2018 அன்று மாலை 4.30 மணியளவில் தாராசுரத்திலிருந்து பாபநாசம் செல்வதற்கு 1ம்எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 49 BH 1213 பதிவு எண் ஸ்ரீ பழனி ஆண்டவர் தனியார் பேருந்தில் மனுதாரர் பயணம் செய்துகொண்டிருக்கும்போது தாராசுரம் பிரதான சாலை அண்ணாசாலை ரவுண்டானா வளைவில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் அதன் ஓட்டுனர் ஓட்டியதால் முன்பக்க படிக்கட்டு வழியாக மனுதாரர் கீழேவிழுந்து அவருக்கு தலையில் பின் பக்க மண்டை ஓடு உடைந்து மூளையில் இரத்த கசிவும் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கை, கால், தோள்பட்டை, நெஞ்சு, விலா,

முதுகு மற்றும் உடல் முழுவதும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டது என்றும் மனுதாரருக்கு தொடர்ந்து உபாதைகள் இருப்பதாகவும் அவரால் எழுந்த நிற்க, நடக்க முடியவில்லை என்றும் பழைய வேலைகளை செய்ய இயலவில்லை என்றும் வேலை, வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர் பேருந்தின் உள் இருக்கையில் அமர்ந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும் பேருந்து சென்ற சாலை மிகவும் மோசமாக இருந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் மனுதாரரின் கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் விபத்திற்கு மனுதாரரும் காரணம் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை ஓட்டிச்சென்று சாலை வளைவில் திரும்பியதாலும் பேருந்திற்கு கதவுகள் இல்லை என்பதாலும் மனுதாரர் கீழே விழுந்துவிட்டார் என்றும் மனுதாரர் பேருந்தில் ஏறும்பொழுதே பேருந்தை ஓட்டுனர் பேருந்தை கிளப்பியதால் மேற்கண்ட விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(iii) மனுதாரர் பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்ததால் மேற்கண்ட விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் 5 நிமிடங்களுக்கு ஒரு முறை பேருந்து இருக்கும் பட்சத்தில் கூட்டம் இல்லாத வேறு பேருந்தில் மனுதாரர் சென்றிருக்க வேண்டும் என்றும் கூட்டம் உள்ள பேருந்தில் ஏறி உள்ளே செல்லாமல் இருந்ததால் மனுதாரர் விபத்திற்கு உள்ளாகியுள்ளார் என்று கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மனுதாரர் நன்கு படித்தவர் என்றும் பேருந்தின் முன் பக்கம் ஏறும்போது பேருந்து வளைவில் திரும்பியதால் விபத்து நிகழ்ந்துள்ளது என்றும் விபத்திற்கு மனுதாரரும் காரணம் என்றும் கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(iv) யாருடைய கவனக்குறைவால், அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று தீர்மானிப்பது முக்கிய பிரச்சனையாகும். மனுதாரர் தரப்பில் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ–1 ஆகவும், குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ–6 ஆகவும் , மாதிரி வரைபடம் ம.சா.ஆ–5 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் கவனக்குறைவாலும், அதிவேகமாக பேருந்தை ஓட்டியதாலும் விபத்து ஏற்பட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(v) ம.சா.ஆ–6 குற்ற இறுதி அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வளைவில் பேருந்தை ஓட்டிச்சென்றதில் பேருந்தின் முன்வாசல் அருகே நின்றுகொண்டிருந்த மனுதாரர் கீழே சாலையில் விழுந்து தலை, கை, கால்களில் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ–5 மாதிரி வரைபடத்தில் சாலையின் வளைவில் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் பேருந்தை ஓட்டி வளைவில் திரும்பியதில் விபத்து ஏற்பட்டதாக மனுதாரர் ம.சா.– 1ஆக சாட்சியம் அளித்துள்ளார். பேருந்தின் முன் வழியாக ஏறியபொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரி தான் என்று ம.சா.–1 சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர் பேருந்திற்குள் வந்த பிறகு பேருந்தானது உரிய வேகத்துடன் சென்றிருக்க வேண்டும். மேலும் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு புலன் விசாரணைக்கு பிறகு அவ்வாறே குற்ற இறுதி அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வளைவில் விபத்து ஏற்பட்டதாக ம.சா.ஆ–5ல் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாலையின் வளைவில் மிதமான வேகத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம். எனவே 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர்,

அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் பேருந்தை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7) <u>பிரச்சனை எண். 2–ற்கான தீர்வு</u>:**

(i) மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றும் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் பேருந்து காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றோ, காப்பீடு பாலிசி இல்லை என்றோ இருதரப்பிலும் வாதம் முன் வைக்கப்படவில்லை. விபத்தானது 09.08.2018 அன்று நடந்துள்ளது. பேருந்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு பாலிசி நடைமுறையில் உள்ளது என்றும் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது என்றும் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ–4 மூலமாக தெரிய வருகிறது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் பேருந்து 2ம் எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதாலும் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருப்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்று தீர்மானிக்கப்படுகிறது.

8) <u>பிரச்சனை எண்.3–ற்கான தீர்வு:</u>

(i) மனுதாரர் விபத்தின் போது கூலி வேலை செய்து மாதம் ரூ. 18,000/– வருமானம் ஈட்டி வந்தார் என்றும் மேற்கண்ட விபத்தில் மனுதாரர் பேருந்தின் முன்பக்க படிக்கட்டு வழியாக மனுதாரர் கீழேவிழுந்து அவருக்கு தலையில் பின் பக்க மண்டை ஓடு உடைந்து மூளையில் இரத்த கசிவும் ஏற்பட்டது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கை, கால், தோள்பட்டை, நெஞ்சு, விலா, முதுகு மற்றும் உடல் முழுவதும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் முதலில் கும்பகோணம், அன்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின் திருச்சி, காவேரி தனியார் மருத்துவமனையில் 09.08.2018 முதல் 19.08.2018 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையில் இருக்கும்பொழுது மூளையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றும் மனுதாரருக்கு தலையில் ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு வெளிநோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி விடுவிப்பு செய்யப்பட்டார் என்றும் மனுதாரர் தற்போது வரை தொடர்ந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் மனுவிலும் ம.சா.–1 சாட்சியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) மேற்கண்ட கொடுங்காயங்களால் தற்போது வரை மனுதாரர் இயல்புநிலைக்கு திரும்ப முடியவில்லை மற்றும் தொடர்ந்து தலைவலி, மயக்கம், உடல்சோர்வு, கை, கால் நடுக்கம், எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மனுதாரரின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு வீட்டில் படுக்கையில் இருப்பதால் மனுதாரருக்கு உதவியாளர் ஒருவர் எப்போதும் தேவைப்படுகிறார் என்றும் மனுவிலும் ம.சா.–1 சாட்சியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் இந்த விபத்தினால் வேலை, வருமானம் இழந்து மிகுந்த மருத்துவ செலவுகளால் மன உளைச்சலும் பொருளாதார

இழப்பும் ஏற்பட்டுள்ளது என்று மனுவிலும் ம.சா.–1 சாட்சியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) மனுதாரருக்கு மேற்கண்ட விபத்தில் பிடரி எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்றும் மூளை பகுதியில் இரத்த கட்டும் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று ம.சா.ஆ–3 காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் மருத்துவக்குழு முன்பு ஆஜராகி அவருக்கு இயலாமை விழுக்காடு சான்று நீ.ம.சா.ஆ–1 வழங்கப்பட்டுள்ளது. செயல்பாட்டு இயலாமை விழுக்காடு 58 % என்று நீ.ம.சா.ஆ–1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. செயல்பாட்டு இயலாமை 58 % என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் பெருக்கல் குறியீடு முறையில் இழப்பீடு வழங்குவது தான் சரியான முறையாக இருக்கும் என தீர்மானிக்கப்படுகிறது.

9) **<u>கொடுங்காயத்திற்கான இழப்பீடு</u>**

மருத்துவ குழுமம் மனுதாரரை பரிசோதித்து வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1ல் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊன விழுக்காடு 58% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக செயல் திறன் இயலாமையாக 58 சதவீதம் நிர்ணயிக்கப்படுகிறது. மனுதாரரின் மாத வருமானம் ரூ. 18,000/– என்றும் கூலிவேலை செய்துள்ளார் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் வேலை மற்றும் வருமானத்தை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. எனவே உத்தேச வருமானத்தின் அடிப்படையில் இழப்பீடு கிடைக்கதக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது. விபத்து 09.08.2018 அன்று நிகழ்ந்துள்ளது. In Andal & Others Vs. Avinav Kannan & Another, reported in (2019) 1 TNMAC 54 (DB) மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின் படி வருமானமானது Cost of Inflation Index–ன் படி வருமானம் நிர்ணயிக்கப்படுகிறது. அதன்படி 2007 – 2008

ஆண்டிற்கான மாத உத்தேச வருமானம் ரூ.6,500/- ஆகும். விபத்தானது 09.08.2018- ல் நிகழ்ந்துள்ளதால் 2017-2018 ஆம் ஆண்டிற்கான Cost of Inflation Index என்பதை பெருக்கி, 2007 - 2008 ஆண்டிற்கான Cost of Inflation Index 129 ஆல் வகுக்க வேண்டும். விபத்தானது2018-ல் நிகழ்ந்துள்ளது என்பதால் 2017-2018 ஆம் ஆண்டிற்கான Cost of Inflation Index 272 ஆகும். அதன்படி ரூ.6,500 X 272/129 = ரூ. 13,705 ஆகும். விபத்தில் அடிப்பட்ட ஆனந்தின் வயது 38 என ம.சா.ஆ-14 ஆதார் அட்டையின் அடிப்படையில் உறுதிசெய்யப்படுகிறது. National Insurance Corporation Ltd., Vs. Pranay Sethi, reported in 2017 (2) TNMAC 609 முன் தீர்ப்பின் படி எதிர்கால எதிர்பார்ப்பிற்காக மாத ஊதியத்தில் 40 சதவீதம் ரூ.5,482 கூடுதலாக சேர்க்கப்பட்டு அதன்படி ரூ. 13,705 + ரூ.5,482 = ரூ.19,187 ஆகும். வருட வருமான கணக்கிற்காக ரூ.19,187 X 12 = ரூ.2,30,244 ஆகும். மனுதாரரின் வயது 38 என்பதால் பெருக்கல் குறியீடு 15 ஆகும். மனுதாரரின் வருட வருமானம் ரூ. 2,30,244 X 15= ரூ.34,53,660. மனுதாரருக்கு ஏற்பட்ட செயல்திறன் இயலாமை 58 சதவீதம் ஆகும். ரூ. 34, 53,660 X58 / 100= ரூ. 20,03,129 ஆகும். மனுதாரருக்கு ஏற்பட்ட செயல்திறன் இயலாமைக்கான இழப்பீட்டு தொகை ரூ. 20,03,129.

**10) <u>வலி மற்றும் துன்பம்</u>**

விபத்தினால் மனுதாரருக்கு தலையில் பின் பக்க மண்டை ஓடு உடைந்து மூளையில் இரத்த கசிவும் ஏற்பட்டது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கை, கால், தோள்பட்டை, நெஞ்சு, விலா, முதுகு மற்றும் உடல் முழுவதும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றில் பிடரியில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டதகாவும் அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**11) <u>உதவியாளர் செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு தலையில் பின் பக்க மண்டை ஓடு உடைந்து மூளையில் இரத்த கசிவும் ஏற்பட்டது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கை, கால், தோள்பட்டை, நெஞ்சு, விலா, முதுகு மற்றும் உடல் முழுவதும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றில் பிடரியில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டதகாவும் அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் 09.08.2018 முதல் 19.08.2018 வரை திருச்சி, காவேரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார். உதவியாளர் உதவி அவசியம் தேவைப்படும். எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**12) <u>ஊட்டச்சத்து உணவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு தலையில் பின் பக்க மண்டை ஓடு உடைந்து மூளையில் இரத்த கசிவும் ஏற்பட்டது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கை, கால், தோள்பட்டை, நெஞ்சு, விலா, முதுகு மற்றும் உடல் முழுவதும் பலத்த கொடுங்காயம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றில் பிடரியில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டதகாவும் அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 58 சதவீத செயல்திறன் இயலாமை உள்ளதாலும் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

13) **<u>போக்குவரத்து செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு மூளை பிடரி பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வழங்கப்படுகிறது.

14) **<u>மருத்துவ செலவு</u>**

மனுதாரர் விபத்தினால் கபால பின் பகுதியின் பிடரியில் எலும்பு முறிவு ஏற்பட்டு மூளை பகுதியில் இரத்த கட்டு ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். சிகிச்சைக்கான செலவுகளை கோரும் பொருட்டு ம.சா.ஆ-10, 11 ஆகிய ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ-10 மருத்துவ செலவு ரசீதில் மருத்துவ செலவு தொகையாக ரூ. 71,500/- குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு பரிசோதனைகள் செய்தததற்கும் சிகிச்சை மேற்கொண்டதற்குமான தொகையாக மேற்கண்ட தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை மனுதாரருக்கு கிடைக்கதக்கது ஆகும். ம.சா.ஆ-10, 11 ஆவணங்களில் மனுதாரர் பெயர் மற்றும் சில விபரங்கள் விடுபட்டுள்ளதாக கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதம் முன்வைத்துள்ளார். மேற்கண்ட ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர் பெயர் மற்றும் மருத்துவ செலவு தொகைகள் அனைத்து ரசீதுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ-11 மூலமாக மருத்துவ செலவுத்தொகையாக ரூ. 33,803/- மனுதாரர் தரப்பில் கோரப்பட்டுள்ளது. ம.சா.ஆ-11ல் அனைத்து ரசீதுகளும் சரியாக உள்ளது. கூட்டுத்தொகைகளை சரி பார்த்ததில் மொத்த தொகை ரூ. 33,824/- என தெரிய வருகிறது. மேற்கண்ட தொகை மனுதாரருக்கு கிடைக்க தக்கது ஆகும். ம.சா.ஆ-10,11 மூலமாக

மனுதாரருக்கு மருத்துவ செலவுத்தொகையாக ரூ. 1,05,324/- கிடைக்கதக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

15) **உடைகள் இழப்பிற்கான செலவு**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| வ. எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | கொடுங்காயத்திற்கான இழப்பீடு | ரூ. 20,03,129/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | ரூ.50,000/- |
| 3 | உதவியாளர் செலவிற்காக | ரூ.15,000/- |
| 4 | ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ.15,000/- |
| 5 | போக்குவரத்து செலவிற்காக | ரூ.10,000/- |
| 6 | மருத்துவ செலவிற்காக | ரூ. 1,05,324/- |
| 7 | உடைகள் இழப்பிற்காக | ரூ.3,000/- |
| | கூடுதல் | ரூ.22,01,453/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.22,01,453/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து ஆயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.22,01,453/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து ஆயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை வழங்க உத்தரவிடப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.17970100009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் **ரூ.21,357/-ஐ** 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 11.08.2023 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 14.08.2023 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.30,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.22,01,453/- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.30/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.21,387/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.21,357 /- |

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>:**

| தலைப்பு | மனுதாரர் | 2ம் எதிர்மனுதாரர் |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ.21,387/- | - |
| வக்காலத்து | ரூ. 10/- | ரூ. 10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ. 39,515/- | ரூ. 39,515/- |
| கூடுதல் | ரூ.60,912 /- | ரூ. 39,525 /- |

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G MANIKANDARAJA
Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.17 17:43:52 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,
கும்பகோணம்.

| | |
|---|---|
| **<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:** | |
| ம.சா.1 | ஆனந்தி |
| **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:** | |
| ம.சா.ஆ.1 | 10.08.2018 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 09.08.2018 தேதியிட்ட திருச்சி காவேரி தனியார் மருத்துவமனை விபத்து பதிவேடு உண்மை நகல் |
| ம.சா.ஆ.3 | 01.09.2018 தேதியிட்ட திருச்சி காவேரி தனியார் மருத்துவமனை காயச்சான்று உண்மை நகல். |
| ம.சா.ஆ.4 | 11.08.2018 தேதியிட்ட TN 49 BH 1213 பதிவெண் கொண்ட பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல். |
| ம.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.6 | 29.09.2018 தேதியிட்ட குற்ற இறுதியறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.7 | 19.08.2018 தேதியிட்ட திருச்சி காவேரி தனியார் மருத்துவமனை |

| | |
|---|---|
| | வழங்கிய விடுவிப்பு சான்று அசல். |
| ம.சா.ஆ.8 | ஸ்கேன் அறிக்கை அசல். |
| ம.சா.ஆ.9 | மருந்து சீட்டு அசல் |
| ம.சா.ஆ.10 | 19.08.2018 தேதியிட்ட திருச்சி காவேரி தனியார் மருத்துவமனை வழங்கிய மருத்துவ ரசீதுகள் அசல் ரூ. 71,500/- |
| ம.சா.ஆ.11 | மருந்து பில்களின் தொகுப்பு ரூ. 33,803/- |
| ம.சா.ஆ.12 | சென்னை ராஜிவ் காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வழங்கிய மருத்துவ குறிப்பு அசல். |
| ம.சா.ஆ.13 | நுண்கதிர் படம் அசல். |
| ம.சா.ஆ.14 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.15 | பேருந்தின் வழித்தட அனுமதி உத்தரவு |
| நீ.ம.சா.ஆ.1 | சென்னை ராஜிவ் காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வழங்கிய மருத்துவ குறிப்பு அசல். |

G MANIKANDARAJA

Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.17 17:44:01 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,
கும்பகோணம்.